தரவேண்டுமென்றால், ' நில் ' சர்டிபிகேட் அவர்கள் அந்த நிறுவனத்திடமிருந்து வாங்க வேண்டும். அப்போது அந்த நிலையம் ' நில் ' சர்டிபிகேட் தரமுடியாமல் பதிவேடுகள் இருக்கின்றன. அதை மாற்ற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அந்தக் குறையைப் போக்க நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : இப்போது எம்.ஏ. டிகிரி பெற்றவர்கள் சென்னைக்கு வந்துதான் பதிவு செய்யும் நிலைமை இருக்கிறது. அதை மாற்றி, அவர்கள் மாவட்டங்களில் வேலை கிடைக்கும்போது, அதற்காக அவர்கள் பதிவை மாற்றும்போது, சினியாரிட்டி பாதிக்கப்படுகிறது. அதனால் அந்தந்த மாவட்டங்களில் அவர்கள் பதிவு செய்து கொள்ள ஏற்பாடு செய்யப் படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்துப் பரிசீலிக்கலாம்.

* 57 Q.—THIRU E. S. VENKATESAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to take into consideration the candidates who have registered their names in any one of the Employment Exchanges in the State and produce a certificate to that effect also for Government Employment instead of selecting candidates sponsored from one particular Exchange only; and

(*b*) if not, whether the Government would consider this proposal ?

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) அரசு அலுவலகங்களில், வேலைக்கு ஆள் எடுக்கும்போது, குறிப்பிட்ட வேலை தேடித்தரும் நிலையங்கள் அனுப்பும் நபர்களை மட்டுமின்றி, வேலை தேடித்தரும் எந்த நிலையத்திலும் பதிவு செய்து அதற்கான சான்றுடன் வருபவர்களையும் ஏற்றுக்கொண்டு, எல்லோருடைய தகுதிகளையும் கவனித்து, ஆட்களை வேலைக்குத் தெரிந்தெடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) இல்லையெனில், இச்செயற்குறிப்பை அரசு பரிசீலனை செய்யுமா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1978 செப்டம்பர் 9]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) பரிசீலனை செய்யும் உத்தேசமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் ஸ்டுடண்ட்ஸ் கைடன்ஸ் பிரோ என்ற அமைப்பு இயங்கி வருகிறது. அது அரசாங்க அங்கீகாரம் பெற்றுள்ளதா? அதில் பதிவு செய்துள்ளவர்கள் அரசு நடத்துகிற நேர்முகத் தேர்வுகளுக்குச் செல்ல வாய்ப்பு கொடுக்கப் படுகிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வேலை தேடித்தரும் நிலையங்கள் தருகிற விவரங்களை வைத்துத்தான் வேலைகள் அளிக்கப்படுகின்றன. பல் கலைக் கழகத்திலுள்ள அந்த கைடன்ஸ் பிரோ ஆலோசனை கூறுகிற அளவில் தங்கள் பணியைச் செய்து வருகிறது.

Teachers of Panchayat Unions.

* 58 *Q.*—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that teachers serving under Panchayat Unions are not permitted to avail themselves of leave on private affairs; and

(*b*) if so, the decision taken thereon ?

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் பணியாற்றும் ஆசிரியர்கள், தங்களது சொந்த அலுவல்களை முன்னிட்டு விடுப்பில் செல்வதற்கு அனுமதிக் கப்படுவதில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இல்லை.

(இ) கேள்வி எழவில்லை.